2010 ஏப்ரல் 30]

சம்பந்தமான கேள்வி என்பதால், தாங்கள் இதற்கு தயவுசெய்து அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பொருட்களையெல்லாம் store பண்ணுவதற்கு ஒரு cold storage கிடையாது. தனியார்கள் நபார்டினுடைய உதவியுடன் அந்த cold storage—ஐ அமைத்தால், அரசு கொள்முதல் செய்யக்கூடிய அந்த விளைபொருட்களை cold storage—லே வைப்பதற்கு அரசு இந்தத் துறை அனுமதியளிக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு Civil Supplies Corporation மூலம், நெல் போன்ற தானியங்களை அரசு கொள்முதல் செய்கிறபோது, அதற்காக godownகள் வைத்திருக்கின்றார்கள். வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரைக்கும், வேளாண்மை விற்பனை மற்றும் வணிக வரித் துறை மூலம் ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண்மை விற்பனைக் கூடங்கள் தேவையான அளவுக்கு இருக்கின்றன. இராமநாதபுரத்திலும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் cold storage—ஐ, குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படுமா என்று கேட்டார்கள். இப்பொழுது அந்த யோசனை அரசிடம் இல்லை. வேண்டுமானால், தனியார் அப்படி godown அமைக்க முன் வந்தால், மத்திய அரசாங்கத்தினுடைய 25 சதவிகிதம் உதவி பெற்றுத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

122—

நீதிமன்றம்

***110108—திரு. பெ. காமராஜ்:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2010 ஏப்ரல் 30

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் வட்டம், தரகம்பட்டியில் நடுவர் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நான் ஏற்கெனவே பல முறை இந்த மாமன்றத்தில் சொல்லியிருப்பதைப்போல், ஒருங்கிணைந்த நீதிமன்றம் கட்டுவதுபற்றிக்கூட சில நேரங்களில் அரசே முடிவு எடுக்கலாம், ஒன்று அல்லது இரண்டை. பொதுவாக புதிய நீதிமன்றங்களைத் துவங்குவது என்பது முழுக்க முழுக்க உயர் நீதிமன்றத்தின் purview–வில் வரக்கூடிய ஒன்றாகும். மாண்புமிகு உறுப்பினர் திரு. காமராஜ் அவர்கள் தரகம்பட்டியிலே ஒரு நடுவர் நீதிமன்றம் ஆரம்பிக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 9–40

தரகம்பட்டி குறித்து என்னுடைய கவனத்திற்கு வருவது, சமீபத்தில்தான் அது தாலுகாவாக ஆனதாகக் கருதுகிறேன். எனவே, தாலுகாவான பிறகு அங்கு ஒரு நீதிமன்றம் தேவை என்று மாண்புமிகு உறுப்பினர் கோருவதில் நியாயம் இருக்கிறது. பொதுவாக அந்த மக்கள் கரூருக்கும், குளித்தலைக்கும் போகிறார்கள். கரூரிலே மாவட்ட நீதிமன்றம், தலைமை குற்றவியல் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குற்றவியல் நீதிமன்றம், இவையெல்லாம் இருக்கின்றன, குளித்தலையிலும் இருக்கின்றது. தரகம்பட்டிக்கும், கரூருக்கும், என்னுடைய கணக்கு சரியாக இருந்தால், 40 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். அதேபோன்று, குளித்தலைக்கு வர வேண்டுமென்றால் 50 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். எனவே, இவ்வளவு தூரத்தைக் கடந்து மக்கள் போய் வருவது சிரமம்தான், கோரிக்கை நியாயமானதுதான். உயர் நீதிமன்றமே அந்த முடிவை எடுக்காவிட்டாலும் தரகம்பட்டியில் ஒரு நீதிமன்றம் அமைவதற்கு என்னுடைய சார்பில் உயர் நீதிமன்றத்திற்கு நான் சிபாரிசு செய்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2010 ஏப்ரல் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடவூர் வட்டத்திற்கு உட்பட்ட கிராமங்களை உள்ளடக்கி, சிந்தாமணிப்பட்டி, பாலவிடுதி, தோகைமலை என்ற மூன்று காவல் நிலையங்கள் உள்ளன. இந்தக் காவல் நிலையங்களில் கடந்த 5 ஆண்டுகளாக 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவாகி உள்ளன. மேற்கண்ட மூன்று காவல் நிலைய வழக்குகளும், குளித்தலை நடுவர் நீதிமன்ற எண் I-ன் அதிகார வரம்பிற்குள் உள்ளது. தற்போது 228 வழக்குகள் விசாரணையில் உள்ளன. அதுமட்டுமல்லாமல், குளித்தலை உரிமையியல் நீதிமன்றத்தில் வருடத்திற்கு 400-க்கு மேல் பதிவாகும் வழக்குகளில் சுமார் 250-க்கும் மேற்பட்ட வழக்குகளை கடவூர் வட்டத்தில் வாழ்ந்து வரும் பொது மக்கள் நடத்தி வருகின்றனர். ஆகவே, வருடந்தோறும் கிட்டத்தட்ட 500-க்கும் மேற்பட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகள் கடவூர் வட்டத்திலிருந்து குளித்தலை நீதிமன்றங்களுக்குச் செல்கின்றன. கடவூர் வட்டப் பகுதிகளிலிருந்து குளித்தலைக்கு சுமார் 60 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் வாழ்ந்து வரும் இம்மக்கள் இதனால் பெரிதும் அவதிப்பட்டு வருகின்றனர். தற்போது தரகம்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு கடவூர் என்ற புதிய வட்டம் அமைந்த பிறகு, தாலுகா அலுவலகம் தரகம்பட்டியிலும், நீதிமன்றப் பணிகளுக்கு குளித்தலைக்கும் செல்ல வேண்டிய நிலைமை உள்ளது. இந்த சிரமத்தைப் போக்கும் வகையில், கடவூர் வட்டப் பொது மக்கள் பயன்பெறும்பொருட்டு, தரகம்பட்டியில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பு நிதியாண்டிலேயே பரிந்துரை செய்து, அதற்கு ஆவன செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்போது சொன்னாரே, இதையெல்லாம் ஒரு மனுவாக எழுதி என்னிடம் கொடுக்க வேண்டும். நானே அதை உயர் நீதிமன்றத்திற்கு forward செய்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

திரு. பெ. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவன செய்வதாக அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதியிலே இருக்கிற கொடுமுடி குற்றவியல் நீதிமன்றம், இப்போது பேரூராட்சிக்குட்பட்ட கட்டடத்திலே இயங்கி வருகிறது. அதற்குக் கட்டடம் கட்டுவதற்காக இடத்தை ஆய்வு செய்து கொண்டிருந்தார்கள். அந்த செயற்குறிப்பு அமைச்சரிடம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன். அடுத்து, ஈரோட்டிலே இருந்த ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு கடந்த ஆண்டுக்கு முன்பு அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அதில் அதிகமான தொகை குறிப்பிட்டிருந்த காரணத்தாலே அது நிறுத்தி வைக்கப்பட்டது. மீண்டும் ஈரோடு ஒருங்கிணைந்த நீதிமன்றத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுமுடி குற்றவியல் நீதிமன்றம் பற்றிச் சொன்னார். அதுகுறித்த செயற்குறிப்பு என்னிடத்திலே இருக்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார்; இல்லை. ஈரோட்டைப் பொறுத்தவரையிலே, கட்டடம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் கேள்விப்படுகிறேன். இதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் சரியாக விசாரித்துப் பார்க்க வேண்டும். I think the work is going on.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி.

2010 ஏப்ரல் 30]

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டையில் சார்பு நீதிமன்றம் அமைவதற்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான இடங்கள் அல்லது தனியாருக்குச் சொந்தமான இடங்களைத் தேர்வு செய்து ஒரு வார காலத்திற்குள் அனுப்புமாறு சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து நிலக்கோட்டை Bar Council-க்கு வேண்டுகோள் விடுத்துள்ளதைக் கருத்திற்கொண்டு, நிலக்கோட்டையில் வருவாய்த் துறைக்குச் சொந்தமான இடம் யாருக்கும் பயன்படாமல் பொதுப் பணித் துறையின் பாதுகாப்பில் பழைய தளவாடச் சாமான்களைப் போட்டு வைக்கும் godown-ஆகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது; அந்த இடத்திற்கு அருகில் உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் தற்போது செயல்பட்டு வருகின்றன. எனவே, நிலக்கோட்டை தொகுதி மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, நிலக்கோட்டையில் godown-ஆகச் செயல்பட்டு வரும் மேற்கண்ட இடத்தினைத் தேர்வு செய்து சார்பு நீதிமன்றம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றம் அமைவதற்கு உயர் நீதிமன்றமே முன்வந்திருக்கிறது. இடம் தேர்வு செய்கின்ற நிலை இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தனியாருக்குச் சொந்தமான இடத்தை எடுக்க முடியாது. அரசுக்குச் சொந்தமான இடம் என்று அவரே சொல்லியிருக்கிறார். எனவே, இது குறித்து உயர் நீதிமன்ற Registrar General அவர்களிடத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் உடனடியாக திண்டுக்கல் மாவட்ட District Judge அவர்களுடன் கலந்து பேசி, மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் கலந்து பேசி, அந்த நிலத்தை நீதிமன்றங்கள் கட்டுவதற்கு எடுப்பதற்கு வழிவகை செய்யப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

[2010 ஏப்ரல் 30

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அம்பேத்கர் பெயரில் சட்டப் பல்கலைக்கழகமும், அதன்மூலம் பல சட்டக் கல்லூரிகளும் தொடங்கப்பட்டு மூன்று ஆண்டு காலம், ஐந்து ஆண்டு காலம் பயிற்சி கொடுத்து வழக்கறிஞர்களாக அவர்கள் தேர்ச்சி பெற்ற பின் Bar Association-ல் அவர்கள் வழக்கறிஞர்களாகப் பதிவு செய்து சிறப்பாகப் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். ஆனால், கர்நாடகா போன்ற வெளி மாநிலங்களில் உள்ள சட்டக் கல்லூரிகளிலே சேர்ந்து அதன் பின் அந்தக் கல்லூரிகளிலே தொடர்ச்சியாகப் படிக்காமல், தேர்வு மட்டும் எழுதி அவர்கள் தேர்ச்சி பெற்றதாக சான்றிதழைக் கொண்டு வருகிறார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அப்பாவு, மூலக் கேள்வி என்னவென்று பாருங்கள்.

திரு. மு. அப்பாவு: அவர்கள் வெளி மாநிலங்களில் அந்தப் படிப்பைப் படித்து முடித்து சான்றிதழ் பெற்று வந்த வழக்கறிஞர்களுடைய சான்றிதழ்களின் உண்மைத் தன்மையையும் அறிந்து, அதுபோல் அது நமக்கு இணையான படிப்புதானா என்று ஆய்வு செய்த பின், அவர்கள் வழக்கறிஞர் சங்கத்தில், அதாவது Bar Association-ல் பதிவு செய்கிறார்களா அல்லது நேரடியாக அவர்களுக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் பதிவு செய்து பணியாற்றுகிறார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து முடிவு செய்ய வேண்டியது Bar Council of India தான். அவர்கள்தான் அந்தந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய அந்தக் கல்லூரிகளை recognise செய்ய வேண்டும்; அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் இந்தக் கேள்வியை எங்கோ பிடித்திருக்கிறார். ஆனால் ஒன்று, college போகிறார்களா, இல்லையா என்பது அல்ல. அவர்கள் exam சரியாக எழுதுகிறார்களா, இல்லையா என்பதுதான் முக்கியமானது. மற்றபடி வருகைப் பதிவேட்டினையெல்லாம் (Attendance) college பார்த்துக்கொள்ளும்.